# காலத்தின் பின்னணியில் ஆறுமுகநாவலர்

ஆ. சிவநேசச்செல்வன், பி. ஏ. [ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

1972, கார்த்திகை

# காலத்தின்
# பின்னணியில்
# ஆறுமுகநாவலர்

762

186.

ஆ. சிவநேசச்செல்வன்

75

# காலத்தின் பின்னணியில் ஆறுமுகநாவலர்

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே தோன்றி ஐம்பத்தேழு ஆண்டுகள் உயிர் வாழ்ந்து காலத்தின் தேவைக்கேற்ப இயங்கிய ஆறுமுக நாவலரை இந்த நூற்றாண்டின் வீர புருஷராகவும் முன்னோடியாகவும் இன்றைய சமூகம் வகைந்து கொள்ள முயல்கின்றது. சுதேச கலாசாரத்தின் சீர் குலைவைப் பேணிய நாவலர் சமூகம், கல்வி, மொழி, கலாச்சாரம், போன்ற பல் துறைகளிலும், பன்முகப்பட்ட நோக்கோடு பணியாற்றியிருந்தும் சைவம் காத்த மகானாகவும் ஐந்தாம் குரவராகவும் மட்டும் அவரை போற்றும் போக்கு செவ்வனே மறையவில்லை. நாவலருடைய வாழ்க்கையையும் பணிகளையும் காலத்தின் ஒளியில் நன்கு மதிப்பீடு செய்யும் போது நாவலரது நோக்கும் போக்கும் விசாலித்திருக்கும் பரப்பை நாம் உணர்ந்து கொள்ள முடியும்;

நாவலர் பிறந்து நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. நாவலரை அவதார புருஷராக வழிபாடு செய்வது ஒரு புறமிருக்க, வீர புருஷராகக் காலம்தேர்வு செய்யும் போக்கைச் சிந்திப்பது பயனுடையது. ''ஒவ்வொரு காலமும் தனக்கு வேண்டிய வீர புருஷர்களையும் சரித்திர நாயகர்களையும் தனக்கு முந்திய காலங்களில் இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்கின்றது. இது மனித வரலாறு கண்ட உண்மை''; சென்ற நூற்றாண்டிலே

தோன்றி மறைந்து இந்த நூற்றாண்டுக்குத் தோன்றாத் துணையாக நின்று வழிகாட்டும் நாவலரின் சிந்தனைகளும், செயல்களும் பல்வேறு துறைகளிலும் விடுதலைக்கு வித்திட்ட நிலையில் அமைவது அவதானிக்கத் தக்கது. அவர் சுதேசப்பற்று மிக்க ஒரு மேலவராகத் (Elite) தமது வாழ்க்கைக் காலத்திலே காலத்தின் தேவைக்கேற்பச் செயலாற்றினார். இம்மேலவர் குழாத்தின் தோற்றம் இலங்கையின் சமுதாயவியல் வரலாற்றிற் குறிப்பாக அவதானிக்க வேண்டியவொரு பண்பாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய மேலவர் குழாம், தேசிய மேலவர் குழாம், உள்ளூர் மேலவர் குழாம் என இருவகைப்பட்டதாக விளங்கியது. கலாநிதி க. கைலாசபதி இதனைப் பின்வருமாறு விளக்குவர்

"நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து தோன்றியிருப்பினும் தலைநகருடன் தொடர்பு கொண்டு அதனைத் தமது பிரதான இருப்பிடமாகக் கொண்ட தேசிய உயர்ந்தோர் குழாத்தினர் இன, மொழி, மத வித்தியாசங்களைக் கடந்து வர்க்க அடிப்படையில் கூடுதலான ஒருமைப்பாடு உடையவராக விளங்கினர். உள்ளூர் உயர்ந்தோர் குழாமோ அகததைய ஒருமைப் பாடும் ஒன்றிணைப்பும் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதனைச் சார்ந்தோர் சிலவேளைகளில் முரண்பட்ட கருத்தோட்டங்களையும் நல நாட்டங்களையும் பிரதிபலிப்பவராயிருந்தனர். இன, மொழி, மத அக்கறைகள் இவர்களைக் கூடுதலாகப் பாதித்தன. கலாசாரப் பிரச்சினைகளில் இவர்கள் தவிர்க்க முடியாதவாறு ஆழ்ந்த ஈடுபாடும் சிரத்தையும் கொண்டு இயங்கினர்",

[பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர் — பக். 38.]

ஆறுமுக நாவலரை உள்ளூர் மேலவர் குழாத்தினரிலே மூலமானவராகக் கூறலாம். அவர் ஆங்கில அறிவு நிரம்பப் பெற்றிருந்தும் தாய் மொழியைப் பயன்படுத்தித் தமது ஆக்கப்பணியில் ஈடுபட்டார். ஒரு வட்டத்துக்குள் இயங்கித் தமது பணிகளைப் புரிந்திருப்பினும் அது பரந்த அளவிலான வளர்ச்சிப் பண்புகளைக் கொண்டு சமுதாயத்திற் பரவலான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இந்த மறைமுகமான வளர்ச்சியும், செல்வாக்கும் சமகாலத்திலும் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் நாவலர் வழிவந்த பலரைத் தோன்றச் செய்தது. சுருங்கக் கூறின் ஆறுமுகநாவலர் தமது பிறந்த நாட்டினை நேசிக்கும் தலைவன் ஆற்ற வேண்டிய செயலூக்கங்களைக் கடமையாகக் கருதி நிதானமாகவும், உறுதியாகவும் பணிசெய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

அன்னியர் ஆட்சி எமது நாட்டிலே பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. ஏறக்குறையக் கடந்த நான்கு நூற்றாண்டுகளில் எமது நாட்டின் சமூக அரசியல் பொருளாதார நிலைகளைத் தொகுத்து நோக்கும் போது பல்வேறு துறைகளிலும் சமு

கத்தின் தேவை பல இயக்க சக்திகளை உருவாக்கியமை ஒரு சமுதாயவியல் மாணவனுக்குப் புலப்படாமற் போகாது. பிறமதத் திணிப்பும், கலாசார மாற்றங்களும், அரசியல் மாற்றங்களும் சமுதாயத்திற் படிப்படியாகப் பல மாற்றங்களை உருவாக்கி வந்தன. போத்துக்கேயர் ஒல்லாந்தர் கால ஆட்சியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் காலத்தில் ஸ்திரமடைந்த சமயச் சூழலும் பிரசாரப் போக்குகளும ஏற்படுத்திய மாற்றங்கள தோற்றுவித்த குழாத்தினரில் தலையாயவர் ஆறுமுக நாவலர் எனலாம்.

ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கையை ஒல்லாந்த மயமாக்கும் பணியுளைவிட ஆரம்பித்திருந்தது; இதற்கு அவர்கள் சமயப் பணியையே உயிர் நாடியாகக் கொள்ள முனைந்தனர். தொடர்ந்து ஆங்கில அரசு ஆதிக்கம் நடாத்திய காலத்திற் பாதிரிமார்கள் சுதேச கலாசாரத்தைச் சீர்குலைத்து இலங்கையை நிரந்தர அடிமை நாடாக ஆக்கும் பணியிலும் ஈடுபட்டனர்.

"பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே சைவ சமயத்திற்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூற சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்திற்கு வந்த வருத்தம் க்ஷய வருத்தம் போன்ற உயிரைக் கொல்லுகின்ற வருத்தம்; அது உட்பகையான வருத்தம்; புறப்பகையில் உட்பகை பொல்லாதது."

எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறியிருப்பது காலப்போக்கின் வளர்ச்சித் தன்மையை விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

ஒரு நாட்டின் பண்பாடு, பாரம்பரியம், கலைகள் இன்னோரன்ன பலவும் மதத்தைத் தழுவியன. ஒரு சமூகத்தில் பல்வேறு வழிகளிலே மதம் வெளிப்படுகின்றது. குறிப்பாகக் குடும்ப பொருளாதார அரசியல் நிறுவனங்கள் மதத்தை உருவாக்குவதை விட மதம் அவைகளுக்கு நல்ல உருவத்தினை அளிக்கின்றது. மனித வர்க்கத்தின் வரலாறு முழுவதிலும் சிறப்பாக ஆதிவாசிச் சமூகப்பணிகளிற் பல நிகழ்ச்சிகளின் போதும் மதச் சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. பிறப்பு முதலான பல்வேறு சமூக நிலைகளிலும்: மக்களுடைய வெளிப்படையான ஆர்வங்களிலும் மதச் சடங்குகள் இடம் பெறுகின்றன. சுருங்கக் கூறின் அரசியல் நிறுவனங்களுடனும் சமூக நிறுவனங்களின் ஆர்வங்களுடனும் மதம் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது. நாகரிகத்தின் வரலாற்றில் மதம் முக்கியமானவொன்று; மதம் அழிந்தால் நாகரிகமும் நிலைகுலையும். மதப் பின்னணியிலே அமைந்த இலங்கையின் பண்பாடு, பாரம்பரியம், கலைகள் யாவும் பாதிரிமார்களின் மதமாற்ற முயற்சியால் நலிவடைந்தன. இரவற் பண்புகளோடு கலப்புநிலை

உருவாகி வந்தது. இவ்வெதிர்முனைத் தாக்குதல்களுக்குக் குரல் கொடுக்கும் பண்பினராகவே ஆறுமுக நாவலர் விளங்கினர்.

"தென்னிலங்கையிலே சிங்கள மக்களிடையே மொஹொத்திவத்த குணநந்த தேரோ, கேர்ணல் ஏச். எஸ். ஒல்கோல்ட், அநகாரிக தர்மபாலா முதலான பௌத்த அறிஞர்களும் முஸ்லீம் அறிஞர்களிடையே அறிஞர் சித்திலெப்பை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், வாப்பிச்சி மரைக்காயர் போன்ற இஸ்லாமிய ஊழியர்களும் தத்தம் சமூகங்களிடையே முதன்மையாகக் கல்வி வளர்ச்சியையும் அதோடு இணைந்து சமய கலாசார, மறுமலர்ச்சியையும் இக்காலப் பிரிவில் ஏற்படுத்தி வந்தார்கள்"

[நாவலர் மகாநாட்டு மலர்—பக். 81]

என எஸ். எம். கமாலுதீன் சமகாலத்தில் ஈழத்திலே நாவலர்போன்று தொண்டாற்றியவர்களைத் தொகுத்துக் காட்டியுள்ளார்கள். நாவலரின் பணிகளை மேற்குறிப்பிட்ட பலருடைய பணிகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வது இன்றைய நிலையில் அவசியமாகும்.

நாவலர் போன்றோர் எதிரியக்கக் குரல்கொடுத்தது வெறுமனே கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு எதிரான இயக்கம் என்ற சித்தாந்தப் பின்னணியில் மட்டுமன்று. உண்மைகளை மறுத்துரைத்த பாதிரிமார்களின் போலிப்பிரசாரங்களுக்கும், சமயத்தின் தொன்மையையும் பெருமையையும் அறியாது மனம்மயங்கிய தமிழ் மக்களுக்கும் நல்லறிவுச் சுடர் கொளுத்துவதும் அவசியமாகியது. மேலும் தேசியச் சமயங்களின் கோட்பாடுகளைக் கேலிக்கிடமாக்கியபோது உண்மைகளை உணர்த்தவேண்டியது தலையாயபணியாகவும் அமைந்தது. பிறநாட்டுத் தாக்குதல்கள் சமயவடிவிலேயே எம்நாட்டிற் புகுந்தன. எமது சமூகத்தின் குறைபாடுகளை உள்ளும் புறமும் அறிந்த நாவலர் எமது சமூக சமய நிறுவனங்களையே கண்டித்தார். அன்றைய தமிழ்மக்களைக் குழப்பிய அத்தனை பிரச்சினைகளையும் நாவலர் சிந்தித்துள்ளார். நாவலரின் வாழ்க்கையையும் எழுத்துக்களையும் ஆழ்ந்து பார்க்கும்போது, தம்மைச் சூழ்ந்து காணப்பட்ட போலி வாழ்க்கையைக் கண்டு மனம் கொதித்து மாற்று வடிவங்களை உருவாக்க முனைந்தமையையே காணமுடிகின்றது. "உண்மை யதார்த்த வாழ்க்கையிலே சிதைந்துபோவதைப் பொறுக்காமல் சமூகத்தை ஏமாற்றிய கிறிஸ்தவர்களைக் கண்டித்ததோடு நடிப்புச் சைவசமயிகளையும் கண்டித்தார்." [க. கை.] நாவலரின் ஆளுமை வளர்ச்சி சமயப் பணியில இருந்து ஆரம்பமானது காலத்தின் ஒளியிலே தவிர்க்க முடியாததாயிற்று.

நாவலரைச் சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்றிய மகானாகவும், ஐந்தாம் குரவராகவும் ஒரு வட்டத்தினுள் நின்று நோக்கியவர்கள நாவலரின் பரந்த பாலதயை உணரமுடியாது

போயினர், அன்னிய ஆதிக்கத்தில் உருவாகிய சகல முரண்பாடுகளையும், குறைபாடுகளையும் நாவலர் உணர்ந்து செயலாற்றினர். தமது தலையாய உயிர்த் தொண்டாகச் சமயப் பணியையே கொண்டு செயலாற்றிய நாவலர் தமிழ்க்கல்வியையும், சைவத் தமிழ் இலக்கியப் பணியையும் கருவியாகக் கொண்டது உண்மையாகும்.

"கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்ரோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமே உடையது எனது சென்ம தேசமாகவும் நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையுமேயாகும்."

மேற்கூறிய வாசகங்கள் நாவலரது ஒரு நோக்கினையே காட்டுவன. எனினும் இந்த எல்லைக்கு அப்பால் நாவலரது பரந்த சிந்தனைகளைச் சிந்திக்க விடாமல் நாவலர் மறைந்த—மறைக்கப்பட்ட நிலை 1968ம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுச் சிலை வைப்புச் சம்பவம் வரை நிலவியது. குறிப்பாகச் சுதந்திரம் பெற்ற ஈழத்தின் தேசியச் சிந்தனை 50—60 ஆண்டுகாலத்தில் உணரப்பட்ட பின்னர் நாவலரது பன்முகப் படுத்தப்பட்ட போக்குகள் விளக்கப்பட்டுத் தேசிய புருஷராகச் சிந்திக்க மக்கள் தலைப்பட்டனர். 1969ம் ஆண்டில் உருவாகிய நாவலர் சிலை வைப்புவைபவம் நாவலரைப் பற்றி மேலும் சிந்திக்கத் தூண்டியது. நாவலரைக் குறுகிய வட்டத்தின் வெளியே சுதேச கலாசாரபாதுகாப்புப் பணியாற்றியவராகவும் தேசியப் பெரியாராகவும் அரசு தபால் தலை வெளியிட்டுக் கௌரவிக்கும் நிலைமை ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றூண்டிலே தமிழ்ச்சமுதாயத்திற்குத் தேவையான கருமங்களை ஆற்றிய நாவலர் பணிகள் பிறருக்கு ஆதர்சமாக மட்டுமன்றிப் பின்தோன்றியவர்களுக்கு வழிகாட்டிய முன்னோடியாகவும் அவரை விளங்க வைத்துள்ளன. தமது வாழ்க்கையை வெறும் உண்டிருந்து வாழும் வாழ்க்கையாகக் கொள்ளாது, 'மற்றவர்க்காக வாழ்தல்' என்ற உன்னதமான பாதையிலே தம்மை இட்டுச் சென்றதும் முக்கியமானதாகும். நாவலரின் தோற்றம்பற்றிப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் கூறுவது அவதானிக்கத்தக்கது.

"பதினான்கு வருடக் கிறிஸ்தவச் சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மாவாக ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்தவசூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர்

என்றெருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை.''

[நாவலர் —
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
— பக். 6]

நாவலர் தென்னகத்திலும் ஈழத்திலும் சைவத்தின் மறுமலர்ச்சிக்காக ஆற்றியதொண்டுகளைச்சமகாலத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது அவரது பணிகளின் பரந்ததன்மை நன்கு புலனாகும். ராஜாராம்மோகன் ராய், தயானந்தசரஸ்வதி, இராமகிருஷ்ணபரமஹம்சராகியோர் பணிகள் பல்வேறு சூழல்களில் இந்துமத மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது போல நாவலரும் இயங்கியிருக்கின்றார். தயானந்த சரஸ்வதி வேதாந்த சைவத்தை நிலைநாட்ட முயன்றதுபோல நாவலர் சித்தாந்த சைவத்தை நிலைநாட்டமுயன்றார். நாவலரை அவைத்திந்திய பின்னணியிலே ஆய்வுசெய்து நோக்கும் போது தான் நாவலரது வரலாற்றுப் பின்னணியையும், அவரது பன்முகப்பட்ட போக்குகளையும் பூரணமாக விளங்கிக்கொள்ள முடியும்.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

டிப-05

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — எ979-11/72

அ. பி. வின்வன் - 1 ஆறுமுகம்